*13*

# உண்மைத்தன்மையுடன் வாழுதல்

## (6:1–18)

*இயேசு தமது சீஷர்களுக்கு, "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" என்று அறிவித்திருந்தார் (5:20). அவரது கூர்மையாக்கப்பட்ட வார்த்தைகள், மலைப்பிரசங்கத்தில் தொடர்ந்து வரவிருந்த எல்லாவற்றிற்கும் தொகுப்புக் கூற்றாக இருந்தன.*

*இயேசு தமது பிரசங்கத்தின் முதல் பகுதியான மத்தேயு 5:21-48ல், தமது போதனைகளைத் தாம் கூறியவற்றிற்கும் யூதத்துவப் பாரம்பரியங்கள் கூறியிருந்தவற்றிற்கும் இடையிலான ஐந்து வித்தியாசங்களுடன் வடிவமைத்திருந்தார். அவரது பிரசங்கத்துவ அறிவுறுத்தல்களின் இரண்டாம் பகுதியான 6:1-18ல் அவர், மார்க்கரீதியான தவறுகளையும், இருதயத்தையும் - புறம்பான சடங்காச்சாரத்திற்கு எதிரான வகையில் உண்மையான தேவபக்தி என்பதுடன் - கையாண்டார்.*

*பொதுவான எச்சரிக்கைக்குப் பின்னர் (6:1) இயேசு, முதன்மையான மூன்று விவரிப்புகளை முன்வைத்தார்: கொடுத்தல் (6:2-4), ஜெபித்தல் (6:5-15) மற்றும் உபவாசித்தல் (6:16-18). யூதத்துவப் போதகர்கள் தங்கள் அறிவுறுத்தலில் மூன்று உதாரணங்களின் குழுக்களைப் பயன்படுத்துதல் பொதுவானதாக இருந்தது என்று கிரெய்க் S. கீனீர் அவர்கள் குறிப்பிட்டார்.[1]*

### பொதுவான எச்சரிக்கை (6:1)

**[1]மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.**

***வசனம் 1.*** *கொடுத்தல், ஜெபித்தல் மற்றும் உபவாசித்தல் என்ற தலைப்புகளுக்குத் தமது அணுகுமுறையில் இயேசு, "நான் கூறவிருப்பவற்றிக்கு நெருக்கமான கவனம் கொடுங்கள்" என்று செயல்விளைவில் கூறினார். **எச்சரிக்கை** என்ற கிரேக்க வார்த்தை (prosechō) "பற்றுதலை மேற்கொள்ளுதல்," "கவனம் செலுத்துதல்" மற்றும் "காத்திருத்தல்" என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. நீதியின் செயல்பாடுகளில், வேதபாரகரும் பரிசேயர்களும் கொண்டிருந்த அதே **எண்ணப்போக்கை,** இயேசுவின் அப்போஸ்தலர்களும் வளர்த்துக் கொள்ளுவதற்கு எதிராக, இயேசு அவர்களை எச்சரித்தார். "நீதி" (dikaiosunē)*

என்ற வார்த்தை 5:20ல் இருந்து திரும்பக் கூறப்படுகிறது. Textus Receptusன் வாசித்தலை அடிப்படையாகக் கொண்ட KJV மொழிபெயர்ப்பில் 1ம் வசனத்தில் "நீதி" என்பதற்குப் பதிலாக "தர்மம்" என்றுள்ளது. இருப்பினும், "நீதி" என்பதே மேன்மையான வாசிப்பாக உள்ளது, மற்றும் 6:1ம் வசனமானது, 6:2-4ல் உள்ள கொடுத்தல் பற்றிய கலந்துரையாடலுக்குச் சுருக்கமான அறிமுகமாக இருத்தலுக்கு மாறாக, 6:2-18ற்கு ஒரு பொதுவான முன்னுரையாக உள்ளது.

உண்மைத் தன்மையுள்ள இருதயத்தில் இருந்து விலக்கப்பட்டதான, மதரீதியான செயல்களைச் செய்தலில், வெறுமையான புறம்பான காட்சியை, உண்மையான நீதி தவிர்க்கிறது. **மக்களால் கவனிக்கப்படும்படி** செயல்கள் அவர்களுக்கு **முன்பாக** நிகழ்த்தப்படக் கூடாது. அதற்குப் பதிலாக அவைகள், தேவனைக் கனப்படுத்தி மகிமைப்படுத்துவதற்காக, அர்ப்பணிப்புள்ள இருதயங்களில் இருந்து செய்யப்பட வேண்டும். "நீதியான" செயல்கள், தேவன் மற்றும் ஒருவரின் சகமனிதர் மீதான அன்பின் வெளிப்பாடாகச் செய்யப்படாமல் இருந்தால், அவைகள் வெறுமையும் வீணுமாகின்றன (1 கொரிந்தியார் 13:1-3). தவறான ஊக்குவித்தலில் இருந்து மதரீதியான செயல்களை நடைமுறைப் படுத்துகிறவர்கள், பிதாவினால் பலன்கள் எதுவும் தங்களுக்கு **அளிக்கப் படாதிருப்பதைக்** கண்டறிவார்கள். "பலன்" (*misthos*) என்ற சொற்றொடர், நமது கொடுத்தல் (6:2), ஜெபம் (6:5) மற்றும் உபவாசித்தல் (6:16) ஆகியவற்றிற்குத் **தேவனுடைய** பதில்செயல் பற்றிய குறிப்பு என்ற வகையில், இவ்விடத்தில் உள்ள தலைப்பு ஒவ்வொன்றிலும் திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது.

## கொடுத்தல் (6:2-4)

**2 ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**3 நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.**

**4 அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.**

**வசனம் 2.** கிரேக்க இலக்கணத்தில் இடைச்சொல்லான *hotan* என்பது நீதியுள்ள செயல்களைப் பற்றிக் கையாளும் ஒவ்வொரு பகுதியின் தொடக்கத்திலும் ஒரு அடையாளக் குறிப்பாகச் செயல்படுகிறது, மற்றும் இது **பொழுது** அல்லது "பொழுதெல்லாம்" [தமிழ் வேதாகமத்தில் "போது"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (6:2, 5, 16). இயேசுவின் உரையைக் கேட்டவர்கள் ஏற்கனவே தர்மம் கொடுத்தல், ஜெபம் மற்றும் உபவாசம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தனர் என்று இயேசு யூகித்தார். இப்படிப்பட்ட செயல்கள் யூத மக்களிடத்தில் எதிர்பார்க்கப்பட்டன.

ஆங்கில வேதாகமத்தில் **ஏழைகளுக்குக் கொடுத்தல்** [தமிழ் வேதாகமத்தில்

*"தர்மஞ் செய்யும்போது"] என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள, eleēmosunē, இரக்கம் அல்லது பரிதாபத்தின் காரணமாக நிகழ்த்தப்பெறும் எந்த செயலையும் பொதுவாகக் குறிக்க முடியும். இது பரிவிரக்கமான உணர்வுகளை மாத்திரமல்ல, ஆனால் இடர்ப்பாட்டில் உள்ளவர்களை விடுவிக்க மேற்கொள்ளப்படும் உண்மையான செயல்பாடுகளைக் குறிப்பதாக உள்ளது. யாக்கோபு நிருபத்தின்படி, தேவையில் உள்ளவர்கள் பற்றிய இதமான உணர்வுகள் கொண்டிருத்தல் மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை. கிறிஸ்தவர் தமது அன்பின் செயல்களினால் பிரச்சனைகளை நீக்கிப்போட நாடுகிறார் (யாக்கோபு 2:14-16).*

*தற்போதய சந்தர்ப்பப் பொருளில், eleēmosunē என்ற வார்த்தை, ஏழைகளுக்கு "தர்மம்"* (KJV; NRSV) *கொடுத்தல் என்ற யூத வழக்கத்தை மிகவும் குறிப்பாக குறிக்கிறது. இந்தச் சொற்றொடரை* KJV *மற்றும்* NRSV *ஆகிய வேதாகமங்கள், புதிய ஏற்பாட்டின் மற்ற இடங்களிலும் "தர்மம்" [அல்லது "பிச்சை"] என்றே வழக்கமாக மொழிபெயர்க்கின்றன (லூக்கா 11:41; 12:33;; நடபடிகள் 3:2; 9:36; 10:2; 24:17). மைக்கேல்* J. *வில்க்கின்ஸ் அவர்கள், "ஏழ்மை என்பது பழங்கால வேளாண்மை சமூகங்களில் மிகவும் பரவலாக இருந்தது, மற்றும் இஸ்ரவேல் மக்கள் ஏழைகளுக்குத் தரவேண்டிய கடமைப்பாட்டை மிகவும் தீவிரமானதாகக் கருதினர் (இ.வ. உபாகமம் 15:11)" என்று விளக்கம் அளித்தார்.[2]*

*மனுஷரால் புகழப்படுவதற்கு என்ற நோக்கத்திற்காக, ஏழைகளுக்குத் தர்மம் கொடுத்தலைக் கர்த்தர் கண்டனம் செய்தார். தர்மம் கொடுத்தலினால் இரட்சிப்பை வாங்க முடியும் என்று யூதர்களில் பலர் நம்பும் அளவுக்கு ரபீக்கள் அறப்பண்பை மிகவும் பிறழ்வு படுத்தி இருந்தனர். தள்ளுபடி ஆகமங்களில் ஒன்றான தோபித்து என்ற புத்தகம், "தர்மம் சாவினின்று காப்பாற்றும்; எல்லா பாவத்தினின்றும் தூய்மையாக்கும்" என்று கூறுகிறது.[3]*

*இயேசு தமது சீஷர்களை, அவர்களின் கொடுத்தலில் மாய்மாலம் கொண்டிருத்தலுக்கு எதிராக எச்சரித்தார். மேலும் அவர், இந்த மக்கள்* **ஜெப ஆலயங்களிலும் தெருக்களிலும்** *தங்களுக்கு முன்பாக* **தாரை ஊதுவிக்க** *விரும்பினர் என்றும் அவர் கூறினார். பணக்காரப் பரிசேயர்கள் தர்மம் கொடுக்கும்போது, மனிதர்களால் கவனிக்கப்பட்டு கனப்படுத்தப்படும்படி, உண்மையிலேயே ஒரு தாரை ஊதுவித்தனர் என்பதற்கான நேரடியான கூற்றாக, இதை நாம் காண வேண்டுமோ? சிலர் இவ்வாறுதான் நினைக்கின்றனர். இருப்பினும் மற்றவர்கள், தேவலாயத்தில் தர்மம் சேகரிக்கப்பட்ட போது, தாரைகள் ஊதப்பட்டன என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். நன்கொடைகள் சேகரிப்பதற்கான பதிமூன்று shofar பெட்டிகள் (shopar என்றால் எபிரெய மொழியில் "தாரை" என்றே அர்த்தப்படுகிறது) எக்காளங்கள் (ஆட்டுக்கடாவின் கொம்புகள்) போன்றே வடிவமைக்கப் பட்டிருந்தன.[4] அவைகள், செலுத்தப்பட்ட பணத்தைத் திருடும்படி திருடர்கள் கைவிட்டுத் தேடுவதைத் தடுப்பதற்காக, நீண்ட, வளைவான கழுத்துக்களைக் கொண்டிருந்தன. இந்தக் கலன்களில் நாணயங்கள் போடப்பட்டு அவற்றின் கழுத்துக்களின் வழியே உருண்டோடும்போது, மக்களின் கவனத்தை ஈர்க்கும்படி அவைகள் சத்தத்தை உண்டாக்கின. நாணயங்கள் ஏற்படுத்திய இந்த சத்தம், எவ்வளவு பணம் செலுத்தப்பட்டது என்பதை ஓரளவுக்குச் சுட்டிக்காண்பிக்கவும் செய்தன*

*(காண்க லூக்கா 21:1, 2).*

*தர்மம் கொடுத்தபோது யாரேனும்* ***தனிப்பட்ட வகையில்*** *தாரை ஊதுவித்தாரா என்பதற்கு, வேதாகமத்திற்குப் புறம்பே சாட்சியம் எதையும் நாம் கொண்டிருப்பதில்லை. கொடுக்கும்போது, தங்கள் பக்கமாய், மற்ற மக்களின் கவனத்தை ஈர்க்கும் மக்களைப் பற்றி விவரிக்கும் ஒரு உருவகமான வழி என்பதைத் தவிர வேறு எதுவும் அதிகமாய் நமது கர்த்தரின் சித்தரிப்பு இருப்பதில்லை. ஜேக்* P. *லூயிஸ் அவர்கள் முடிவு செய்தபடி, இது "உங்கள் சொந்தக் கொம்பைக் கொண்டு ஒலி எழுப்புதல் என்பதுடன் ஒப்பிடப்படக் கூடிய உருவக அணி சொல்விளக்கம்" என்று இருந்திருக்க முடியும்.*[5] *இந்தச் சொல்விளக்கம், "மழைக்கான வெளியரங்கமான வசந்தகால உபவாசங்களில் தர்மம் கொடுக்கப்பட்ட போது, வெள்ளாட்டுக் கடாக்களின் கொம்புகளைக் கொண்டு ஊதுதல் என்ற உண்மையில் இருந்து தரவழைக்கப் பட்டிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது" என்று அவர் நினைத்தார்.*[6]

*மற்றவர்களின் மனதை ஈர்ப்பதற்காகக் கொடுத்தவர்களை,* ***மாய்மாலக்காரர்கள்*** *என்று இயேசு குறிப்பிட்டார். "மாய்மாலக்காரர்"* (hypocrite) *என்பது hupokritēs என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, இது தனது அடிப்படை அர்த்தத்தில் "பொய் நடிப்புக்காரர்" என்பதைக் குறிப்பிட்டது. ஒரு அரங்கசாலை பற்றி இயேசு அறிந்திருந்தார். நாசரேத்தில் இருந்து ஒரு சில மைல்கள் தூரத்தில் இருந்த, செப்போரிஸ் என்ற புறஜாதியார் பட்டணத்தை அவர் நன்கு அறிந்திருந்தார் என்பது உறுதி. இருப்பினும், இந்தக் காலகட்டத்திற்கு முன்னர், hupokritēs என்ற சொற்றொடர், நடிப்பவர்களைக் குறிப்பதற்கு, ஏற்கனவே யூதத்துவ வட்டாரங்களில் பயன்படுத்தப் பட்டிருந்தது.*[7] *"[இந்த மக்கள்] தங்கள் உள்ளான மோசடியைத் தங்களிடம் இருந்தேகூட மறைத்த, நீதியான புறம்பான செயல்களைச் செய்துகொண்டிருந்தனர். இவர்களின் மாய்மாலம், விசேஷமாக இங்கு, <u>தவறான காரணங்களுக்காக சரியான விஷயங்களைச் செய்தல்</u> என்று அர்த்தப்படுகிறது."*[8] *"மாய்மாலக்காரர்" என்ற வார்த்தை, நீதியைப் பற்றிய ஒவ்வொரு பகுதியின் தொடக்கத்திலும் (6:2, 5, 16), மற்றும் மத்தேயு சுவிசேஷத்தில் மற்ற பல முறைகளும் (7:5; 15:7; 22:18; 23:13, 15, 23, 25, 27, 29; 24:51) தோன்றுகிறது.*

*மக்கள்* ***அங்கீகரிக்கப்படுவதற்கு மாத்திரம் கொடுக்கின்றனர்*** *என்றால், அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று இயேசு கூறினார். "அடைந்து தீர்ந்ததென்று" என்பது apechō என்பதில் இருந்து வருகிற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்க்கிறது. இது பழங்கால உலகத்தில் இரசீதுகளின் அடிப்பகுதியில் பயன்படுத்தப்பட்டதும், "முற்றிலும் பணம் செலுத்தப்பட்டாயிற்று" என்று அர்த்தப் படுவதுமான, கணக்கியல் சொற்றொடராக இருந்தது (காண்க பிலிப்பியர் 4:18* NRSV*).*[9] *மாய்மாலக்காரரால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித அங்கீகாரம் மாத்திரமே அவர்களின் பலனாக இருக்கும் என்று இயேசு கூறினார். அவர்கள் பரலோகத்தில் இருக்கும் பிதாவினிடத்தில் இருந்து எதையும் பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது.*

***வசனம் 3.*** *இந்தக் கருத்தை மேலும் வலியுறுத்துவதற்கு இயேசு, "<u>நீயோ தர்மஞ் செய்யும்போது,</u> உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை <u>செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது</u>" என்று கூறினார்.*

இந்தப் புத்திமதியானது, கொடுத்தல் என்பது இயன்ற அளவிற்கு தனிப்பட்ட வகையில் விவேகத்துடன் செய்யப்பட வேண்டும் என்று கூறுவதற்கான பழமொழி நடையாக உள்ளது என்று வழக்கமாகப் புரிந்துகொள்ளப் படுகிறது. ராபர்ட் H. குண்ரீ அவர்கள், தனிப்பட்டவகையில் விவேகம் என்பதை வலியுறுத்திக்கொண்டே, மாறுபட்ட ஒரு கண்ணோட்டத்தை அளித்தார்: "அனேகமாக இந்தச் சொல்விளக்கம், நேரடி அர்த்தத்தில் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாக இருக்கலாம்: ஒரு கொடையானது அதைப் பெற்றுக் கொள்பவருக்கு, அருகில் உள்ள மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதான இரு கைகளாலும் தரப்படாமல், பகட்டின்றி வலது கையினால் மாத்திரம் தரப்பட வேண்டும்."[10]

***வசனம் 4.*** நன்மை செய்யவும், தேவனைப் பிரியப்படுத்தவும் நேர்மையாகக் கொடுக்கும் நபர், அதை ***அந்தரங்கமாய்/இரகசியமாய்ச்*** செய்வார், மற்றும் அதற்காக அவரைத் தேவன் ஆசீர்வதிப்பார். "அந்தரங்கத்தில்" என்பது, மாய்மாலக்காரர் செய்வது போன்று பிறரின் கவனத்தை ஈர்க்க முயற்சி செய்யாது என்று அர்த்தப்படுகிறது. அந்தரங்கமாய்/இரகசியமாய் **கொடுத்தல்** பற்றிய இயேசுவின் போதனை, யூதத்துவத்திற்கு அந்நியமானதாக இருக்கவில்லை. மிஷ்னா என்ற புத்தகத்தின்படி, தேவாலயத்தில், தாழ்மையான யூதர் ஒருவர் தனிப்பட்ட வகையில், மற்றவர்களின் கவனத்தைத் தன்னை நோக்கி ஈர்க்காதவண்ணம் கொடுக்கக் கூடிய இரகசியமான இடம் ஒன்று இருந்தது. அவரது கொடையானது, ஏழையாக இருந்த தேவபக்தியுள்ள ஒரு குடும்பத்தை ஆதரிக்க உதவும்.[11] தல்மூத் என்ற புத்தகம், "அந்தரங்கமாய்/இரகசியமாய் தர்மம் செய்யும் ஒரு மனிதர், நமது போதகரான மோசேயைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறார்" என்று போதிக்கிறது.[12] இப்புத்தகம், "கொடுப்பவர், தாம் யாருக்குக் கொடுக்கிறோம் என்று அறியாதிருக்க வேண்டும், மற்றும் பெறுபவர், தாம் யாரிடத்தில் இருந்து பெறுகிறோம் என்பதையும் அறியாதிருக்க வேண்டும்" என்றும் கூறுகிறது.[13]

இருப்பினும் எல்லாக் கொடுத்தலும் அந்தரங்கமாய்ச் செய்யப்பட வேண்டும் என்று இயேசு அர்த்தப்படுத்தவில்லை. ஏற்கனவே அவர், "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று கூறியிருந்தார் (5:16). நல்ல செயல்களுக்காகப் புகழப்பட வேண்டும் என்பதற்காக அவைகள் செய்யப்படக்கூடாது என்பதே அவரது போதனையாக இருந்தது. அவைகள் அங்கீகாரத்தை நாடாமல் செய்யப்பட வேண்டியவையாக உள்ளன: பின்பு அவற்றை மற்றவர்கள் உற்று நோக்கினால், தேவன் மகிமைப்படுத்தப் படுவார். நன்மை செய்தலை விளம்பரப் படுத்துதலை இயேசு கண்டனம் பண்ணவில்லை, ஆனால் விளம்பரத்திற்காக மாத்திரமே நன்மை செய்தல் என்ற நோக்கத்தைத்தான் அவர் கண்டனம் பண்ணினார்.

கொடுத்தல் என்பது, மனிதர்களின் பாராட்டுதல்களுக்காக இன்றி தேவனிடம் இருந்து வரும் பலனுக்காகச் செய்யப்பட வேண்டும்: **அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற (தேவன்) உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.** தமது எல்லாம் அறிந்த தன்மையில், தமது மக்களால் செய்யப்படும் தர்ம செயல்கள் யாவற்றையும் "காணுகிறார்" மற்றும்

*அதற்கு நியாயமான "பலன்" ஒன்றைத் தருவார்.*

## *ஜெபித்தல் (6:5-15)*

### *மாய்மாலக்காரர்களைப் போன்று அல்ல (6:5-8)*

***[5]அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல் லுகிறேன்.***

***[6]நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.***

***[7]அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.***

***[8]அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.***

*இயேசு அடுத்ததாக ஜெபத்தைப் பற்றி, அதைச் செய்வதற்கான சரியான வழி மற்றும் தவறான வழியைப் பற்றிப் பேசினார். ஜெபித்தல் என்பது சரியானதாகவே உள்ளது, ஆனால் அதை "மாய்மாலக்காரர்" செய்வது போன்று ஜெபித்தல் தவறானதாக உள்ளது. இங்கு நாம் வெளியரங்கமான ஆராதனை பற்றிய எளிய கடிந்துகொள்ளுதலைக் காண்பவர்களாக இருக்கக் கூடாது. மற்றவர்களுக்கு முன்பாக நமது ஜெபத்தைப் பகட்டு ஆரவாரத்துடன் செய்யும்படியான சோதனைக்கு நம்மை ஒப்புக்கொடுத்து விடுவதற்கு எதிராக மாத்திரமே இயேசு எச்சரிக்கை செய்தார்.[14]*

***வசனம் 5. நீ ஜெபம்பண்ணும்போது*** *என்று கூறி இயேசு தொடங்கினார். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட வேளையில் ஜெபிக்கும் பழக்கம் கொண்டிருந்த யூதர்களுக்கு அவர் இதைக் கூறினார். மூன்றாம் மணி வேளை (காலை 9.00 மணி) மற்றும் ஒன்பதாம் மணி வேளை (மாலை 3.00 மணி) ஆகிய, காலை மற்றும் மாலை வேளைகளில் செலுத்தப்படும் பலியுடன் (எஸ்றா 9:5; தானியேல் 9:21; லூக்கா 1:10; நடபடிகள் 3:1) ஜெபங்கள் இணைந்திருந்தன.[15] ஆறாம் மணி வேளை, அதாவது நண்பகல் வேளையிலும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன (நடபடிகள் 10:9). ஆகையால், ஒரு நாளில் மூன்று வேளைகள் ஜெபித்தல் என்பது வழக்கமாக இருந்தது (சங்கீதம் 55:17; தானியேல் 6:10). தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் சிலர் இந்த நடைமுறையைத் தொடர்ந்து செய்துவந்தனர்.[16]*

*இயேசு, தமது சீஷர்கள்* ***மாய்மாலக்காரர்களைப் போல் இருக்கக் கூடாது*** *என்று கூறினார். மத்தேயு 23ல் அவர், "மாய்மாலக்காரர்கள்" என்பதற்கு ஒரு*

*விளக்கத்தை அளித்தார்: "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" (23:2, 3).* NIV *வேதாகமத்தில், "அவர்கள் பிரசங்கிப்பதை அவர்கள் நடைமுறைப் படுத்துவதில்லை" என்றுள்ளது. பின்பு இயேசு, யூதத்தலைவர்கள் தாங்கள் "ஒரு விரலினாலும் தொட" மனவிருப்பமற்ற கனமான சுமைகளை மக்கள் மீது சுமத்துவார்கள் என்று கூறினார் (23:4). மேலும் அவர்களின் மாய்மாலமான நோக்கங்களைப் பற்றியும் அவர் பேசினார்: "தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்" (23:5).*

*இந்த யூதர்கள் ஜெபித்தபோது காணப்படுவதைக் காட்டிலும் அதிகமாக வேறு எவ்விடத்திலும் மாய்மாலம் என்பது அதிகம் தெளிவாக உற்றுக்கவனிக்கப்பட இயலாது.* ***மாய்மாலக்காரர்கள், மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்.*** *யூதர்கள் அடிக்கடி, நின்று, மேல் நோக்கிப் பார்த்திருக்கையில், தங்கள் கைகளை வானத்திற்கு நேராக வெளியே நீட்டிக்கொண்டு ஜெபித்தனர் (1 இராஜாக்கள் 8:22; சங்கீதம் 28:2; 63:4; 134:2; லூக்கா 18:11, 13). ராபர்ட்* H. *மவுன்ஸ் அவர்களின் கூற்றுப்படி, ஜெபம் செய்யப்பட நியமித்த வேளையில் ஒருவர் தெருவில் இருந்தார் என்றால், "நின்று, தேவாலயத்தை நோக்கித் திரும்பி, ஜெபித்தல் என்பது தகுதியானதாக இருந்தது."[17] ஒருவேளை மாய்மாலக்காரர்கள், ஜெபிக்கும் வேளையில் தாங்கள், எல்லாராலும் காணப்படக்கூடிய ஒரு இடத்தில் இருக்கும்படி திட்டமிட்டுக் கொள்வார்கள்.*

*இந்த மக்கள், வெளியரங்கமாக ஜெபித்தல் என்பது, ஆவிக்குரிய சிந்தை கொண்டவர்களாக உள்ளனர் என்ற வகையில் அவர்களின் புகழ்ச்சிகளைக் கட்டி எழுப்பிய காரணத்தினால், அவ்வாறு ஜெபிக்க விரும்பினர். அவர்கள் "தேவபக்தியுள்ளவர்கள்" என்று அறியப்பட விரும்பினர். அவர்கள் [மற்றவர்களால்] கவனிக்கப்படுதலை விரும்பினர் மற்றும் தாங்கள் கவனிக்கப்படுதலைக் கொண்டுவரும் சூழ்நிலைகளில் இருக்க மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டனர் (லூக்கா 18:9-14). இப்படிப்பட்ட மக்கள்* ***தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று*** *இயேசு கூறினார். மனிதரால் பாராட்டப்படுதல் என்பது மாத்திரமே அவர்கள் பெறும் ஊதியமாக இருந்தது (6:2ன் மீதான விளக்கத்தைக் காணவும்).*

***வசனம் 6.*** *இதற்கு நேர்மாறாக இயேசு, தமது சீஷர்கள்* ***அந்தரங்கமாக*** *தேவனிடத்தில் தாழ்மையுடன்* ***ஜெபிக்க வேண்டும்*** *என்று வழிநடத்தினார்.* ***அறைவீடு*** (*tameion*) *என்பது வீட்டிற்குள் உள்ள பொருள் வைப்பறை ஒன்றைக் குறிப்பிட்டது. களிமண்ணால் ஆன செங்கற்களினால் வீடுகள் பெரும்பாலும் கட்டப்பட்டதால், கள்வர்கள் அந்தச் சுவர்களில் கன்னமிடவும் (6:19) வீட்டிற்குள் கொள்ளையிட நுழையவும் முடிந்தது. ஆகையால் பூட்டப்படக் கூடிய ஒரு கதவுடன் ஒரு உள் அறை வீட்டைக் கொண்டிருத்தல் முக்கியமானதாக இருந்தது.[18] இருதயத்தில்* ***அந்தரங்கமாக ஜெபிப்பவர்கள்,***

அந்தரங்கத்தில் செய்யப்படும் ஒவ்வொன்றையும் கவனிக்கும் தங்கள் **பிதாவினிடத்தில்** இருந்து **பலனைப்** பெற்றுக்கொள்வார்கள்.

ஜெப ஆலய ஆராதனைகளிலோ அல்லது தேவாலய ஆராதனைகளிலோ வெளியரங்கமாக ஜெபித்தலை இயேசு தடைசெய்யவில்லை, ஆனால் அவர்கள் ஜெபத்தைக் காட்சிப்படுத்துதலை இயேசு கண்டனம் பண்ணினார். இயேசு அந்தரங்கமாகவும் வெளியரங்கமாகவும் ஜெபித்தார், மற்றும் தமது சீஷர்கள் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று அவர் வெளியரங்கமாகப் போதித்தார் *(6:9-13)*.

**வசனம் 7.** மாய்மாலக்காரர்கள், தாங்கள் ஜெபித்தல் *பார்க்கப்பட வேண்டும்* என்று விரும்பியது மாத்திரமின்றி, தங்கள் ஜெபம் *கேட்கப்பட வேண்டும்* என்றும் விரும்பினர் என்று இயேசு மறைமுகமாக உணர்த்தினார். அவர்கள் **பல வார்த்தைகளை** அர்த்தமற்ற வகையில் **திரும்பத் திரும்பப் பயன்படுத்தினர்.** நீண்ட ஜெபங்களை இயேசு கண்டனம் பண்ணவில்லை. குறைந்தபட்சம் ஒரு முறையாவது அவர் தாமே, இரா முழுவதும் ஜெபித்தார் (லூக்கா *6:12*). ஜெபித்த ஒருவரின் எண்ணப்போக்கு பற்றி அவர் அக்கறை கொண்டதைவிட அதிகமாக ஜெபத்தின் நீளம் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஜெபம் என்பது பேச்சுத்திறன் அல்லது கல்வியைக் காட்சிப்படுத்துவதாக இருக்கக் கூடாது.

ஜெபங்களைத் திரும்பக் கூறுவதில் இருந்து இயேசு தமது சீஷர்களைத் தடைசெய்யவில்லை. கெத்செமெனே தோட்டத்தில், தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இரவில் அவர் ஒரே ஜெபத்தை மூன்று முறை அத்தியாவசியமாக ஜெபித்தார் *(26:36-46)*. திரும்பத் திரும்ப உரைத்தலைக் கண்டனம் பண்ணுவதற்குப் பதிலாக அவர், ஜெபிக்கும் ஒருவரின் இருதயத்தில் இருந்து வராத, அர்த்தமற்ற, திரும்பத் திரும்ப உரைக்கப்படும் சொற்றொடர்களைப் பயன்படுத்துதலையே கண்டனம் பண்ணினார். "வீண்வார்த்தைகளை அலப்புதல்" என்பதற்கான (*battalogeō*) கிரேக்க வார்த்தை, "சோம்பறித் தனமான, பயனற்ற பேச்சு" என்று அர்த்தப்படுகிறது. இயேசு தமது வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப உரைத்தார் என்றாலும், அவர் தமது ஜெபித்தலில் தனிப்பட்டவராகவும் மற்றும் உண்மைத் தன்மை உடையவராகவும் இருந்தார். அவர், தமது சீஷர்கள் தங்கள் வார்த்தைகள் தேவனால் கேட்கப்படுவதற்கு, தாங்கள் வார்த்தைகளினால் தேவனை வசப்படுத்த வேண்டும் என்று நினைப்பதற்கு எதிராக அவர்களை அவர் எச்சரித்தார். முதல் நூற்றாண்டில் சில ரபீக்கள், நீண்ட ஜெபமானது தேவன் கேட்டு பதில் அளிக்க ஏதுவானதாக இருந்தது என்று போதித்தனர்.[19]

**புறஜாதிகள் அதிக வசனிப்பினால்** தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நம்பினர். **புறதெய்வ** வணக்க மதங்கள், இருதயத்தின் எண்ணப்போக்கைப் புறக்கணித்து, அதே வேளையில் சரியான சடங்கை வலியுறுத்தின. அவர்களின் மிகச்சரியான தன்மைக்கு ஒரு உதாரணம், கீனரின் எழுத்தில் காணப்படுகிறது: "ரோமானிய நீதிபதிகள், பாரம்பரியத்தினால் ஒப்புவிக்கப்பட்டபடி மிகச்சரியாக, ஜெபங்ளை வாசித்தனர்; 'ஒரு உச்சரிப்போ அல்லது ஒரு சடங்காச்சார சைகையோ சரியற்ற வகையில் நிகழ்த்தப்பட்டால், ஜெபம் செல்லாததாகிவிடும்.' "[20] ஜெபம் என்பது பெரும்பாலும், கடவுள்களைத் திறமையாகக் கையாள்வதாகக் கண்ணோக்கப்பட்டது. புறஜாதியார் "தெய்வீகப் பெயர்களின் நீண்ட பட்டியலை மேம்படுத்தினர், முடிவற்ற

வகையில் திரும்பத் திரும்பக் கூறுவதால் அவர்கள் உண்மையான கடவுளின் பெயரை ஏதோ ஒரு வகையில் தூண்டியெழுப்பி தாங்கள் விரும்பியவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்பினர்" என்று மவுன்ஸ் அவர்கள் கூறினார்.[21] பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில், "புறதெய்வ வணக்கச் சடங்குகளில் திரும்பத் திரும்ப செய்யப்படுபவை பற்றிய தகவல்கள் காணப்பட முடியும்: 'பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்' (1 இராஜாக்கள் 18:26), மற்றும் எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் 'எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்' (நடபடிகள் 19:34)."[22]

**வசனம் 8.** இயேசுவைப் பின்பற்றுபவர்கள் **இவர்களைப் போல்** - அதாவது புறஜாதியாரை (மற்றும் மாய்மாலக்காரர்களை)ப் போல் - இருக்கும்படி இயேசு விரும்பவில்லை. **பிதா** தமது பிள்ளைகளுக்குத் **தேவை** என்ன என்பதை, அவர்கள் **வேண்டிக் கொள்வதற்கு** முன்னமே **அறிகிறார்.** தேவனுக்குத் தகவல் அறிவித்தலோ அல்லது தேவனைத் தூண்டுதலோ, ஜெபத்தின் நோக்கமல்ல.[23] அவரது பிள்ளைகள் அவரை, பயபக்தியுடன், தியானத்துடன் மற்றும் நன்றி உணர்வுடன் அணுக வேண்டும். ஜெபத்தில் ஒருவர், சகல கொடைகளையும் கொடுப்பவர் என்ற வகையில் தேவன்மீது தாம் சார்ந்திருத்தலைச் செயல்விளக்கப்படுத்துகிறார் (7:7-11; காண்க யாக்கோபு 1:17).

*மாதிரி ஜெபம் (6:9-13)*

**9நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது:**

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.**

**10உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.**

**11எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தரும்.**

**12எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.**

**13எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.**

ஜெபிப்பது எப்படி என்று யூதத்துவ ரபீக்கள் தங்கள் மாணவர்களுக்குப் போதித்தல் என்பது வழக்கமானதாக இருந்தது. இயேசுவின் சீஷர்கள், "ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்று வேண்டிக் கேட்டிருந்தனர் (லூக்கா 11:1). இயேசுவின் பிரசங்கத்தினுடைய இந்தப் பகுதியில் அவர் தமது சீஷர்களுக்கு, தேவனிடத்தில் ஜெபித்தலின் அடிப்படைகளைப் போதித்தார்.

அவர்களுக்கு இயேசு போதித்த ஜெபம் (காண்க லூக்கா 11:2-4) அடிக்கடி "கர்த்தருடைய ஜெபம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இதை "சீஷர்களின் ஜெபம்" என்று அழைத்தல் நமக்கு எவ்வளவு பொருத்தமானதாக இருக்கும்!

இது கர்த்தருடைய தனிப்பட்ட ஜெபமாக இராமல், சீஷர்களின் பயனுக்காகக் கொடுக்கப்பட்ட ஜெபமாக இருந்தது (காண்க 26:36-46; யோவான் 17:1-26). [தமிழில் இந்த ஜெபம் "கர்த்தர் கற்பித்த ஜெபம்" என்றே கத்தோலிக்க வட்டாரத்தில் அழைக்கப்படுகிறது.] ஜெபித்தல் எவ்வாறு என்பதற்கு அடிப்படையான வரைகுறிப்புகளை இதில் இயேசு தந்ததால், இது "மாதிரி ஜெபம்" என்று பொருத்தமான வகையில் குறிப்பிடப்பட்டும் உள்ளது. இந்த மாதிரி ஜெபம், சுருக்கமானதாக, எளியதாக, இருப்பினும் ஆழ்ந்தறிவு உடையதாக உள்ளது.

**வசனம் 9.** தேவனை **பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே** என்று குறிப்பிட்டதைக் கொண்டு இந்த ஜெபத்தை இயேசு தொடங்கினார். அவரால் கூற முடிந்தபடி "எனது பிதாவே" என்று அவர் கூறவில்லை. அவர், "எங்கள் பிதாவே" என்று கூறினார். தனிச்சிறந்த ஒரு வழியில் இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார் (யோவான் 3:16), ஆனால் அவரது சீஷர்கள், ஆவிக்குரிய வகையில் தேவனுடைய குமாரர்களாக உள்ளனர் (யோவான் 1:11-13). அவர், தேவனை அணுகுவதற்குத் தாம் செய்த அதே மிகநெருக்கமான வழியில் தம்மைப் பின்பற்றுபவர்களும் அணுக வேண்டும் என்று அறிவுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ரோமாபுரியில் இருந்த சகோதரர்களின் இருதயங்களில் தேவன், தமது குமாரனுடைய ஆவியை அனுப்பியிருந்தார் என்றும் அவர்கள் "அப்பா பிதாவே, என்று கூப்பிட" முடியும் என்றும் அவர்களுக்குப் பவுல் கூறினார் (ரோமர் 8:15). "Abba" என்பது ஒரு பிள்ளை தனது தந்தையை அழைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அரமாயிக் சொற்றொடராக உள்ளது. இது "Daddy" என்பதைவிட குறைவான நடைமுறையில் பயன்படுத்தப் படுவதாக உள்ளது, ஆனால் இது "Father" என்பதைவிட மிகவும் நெருக்கமானதாக உள்ளது.

தந்தை என்ற வகையில் தேவன் என்ற கருத்து மிகமுக்கியமான ஆய்வுப்பொருளாக இல்லாதிருந்தாலும் , பழைய ஏற்பாட்டில் காணப்படுகிறது (யாத்திராகமம் 4:22; உபாகமம் 8:5; 14:1; 32:6; சங்கீதம் 2:7; 103:13; ஏசாயா 63:16; 64:8; எரேமியா 3:4, 19; ஓசியா 11:1-4; மல்கியா 2:10). ஏற்பாடுகளுக்கு இடையிலான காலகட்டத்து யூத இலக்கியத்தில், ஜெபத்தில் தேவனைப் பிதா என்று அழைத்தமைக்குச் சில உதாரணங்கள் உள்ளன என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது.[24] இருப்பினும் இயேசு தமது ஊழியத்தின்போது, தேவனைப்பிதா என்ற வகையில் அந்த கருத்தைப் பிரபலப்படுத்தினார்.

தேவனுடைய **நாமம் பரிசுத்தப்படுவதாக** என்று இயேசு கூறினார். சங்கீதக்காரர், "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" என்று எழுதினார் (சங்கீதம் 111:9). இதை KJV வேதாகமம், "Holy and reverend is his name" என்று தரவழைக்கிறது. "Reverend" என்பது தேவனுடைய பெயரோ அல்லது தேவனுக்கான பட்டப்பெயரோ அல்ல; இது அவரது பெயருக்குத் தழுவலாக உள்ளது. அவரது பெயர் [நாமம்] பரிசுத்தப்படுத்தப்பட, கனப்படுத்தப்பட மற்றும் மதிக்கப்பட வேண்டும் (காண்க யாத்திராகமம் 20:7).

"பரிசுத்தப்படுதல்" என்பது "பரிசுத்தமாக்குதல்" என்று அர்த்தப்படுகிற *hagiazō* என்ற சொல்லின் தொன்மையான மொழிபெயர்ப்பாக

*உள்ளது. உண்மையில் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப் படுத்துதல் என்பதில், அவரைக் கனப்படுத்துதல், அவரை மகிமைப்படுத்துதல் மற்றும் அவருக்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது (5:16; 7:21; 1 கொரிந்தியர் 10:31). "பரிசுத்தவான்"* (saint), *"பரிசுத்தமாக்குதல்"* (sanctify), *மற்றும் "பரிசுத்தப்படுத்துதல்"* (sanctification), *ஆகியவை "பரிசுத்தப்படுதல்"* (hallowed) என்பதுடன் தொடர்புடைய பிற சொற்றொடர்கள் ஆகும். தேவன் *பரிசுத்தராக இருக்கிறார், மற்றும் அவரது பிள்ளைகளும் பரிசுத்தர்களாக இருக்க வேண்டும் (1 பேதுரு 1:15, 16).*

***வசனம் 10.*** *தேவனை அழைத்து அவரை வழிபட்ட பின்பு இயேசு, அவரது இராஜ்யம் என்ற கருத்தின்பக்கமாய்த் திரும்பி,* ***உம்முடைய ராஜ்யம் வருவதாக*** *என்று கூறினார். இயேசு தமது சீஷர்களுக்கு இந்த ஜெபத்தைக் கற்பித்த காலத்தில், தேவனுடைய இராஜ்யம் இன்னமும் எதிர்காலத்திற்கு உரியதாகவே இருந்தது (3:2; 4:17; 10:7; மாற்கு 9:1; நடபடிகள் 1:6-8). இந்த ஜெபமானது, நடபடிகள் 2ல் பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, பெந்தெகொஸ்தே நாளில் நடக்க இருந்ததை முன்னெதிர் நோக்கிய ஜெபமாக இருந்தது. அந்த நாளில் பேதுரு முதல் முறையாக, சுவிசேஷத்தை முழுமையாகப் பிரசங்கித்தார். தாவீதின் அரியணையில் அமரும்படிக்கு, இயேசுவைத் தேவன் உயிரோடு எழுப்பினார் என்றும், அந்த வேளையில் அவர் பரலோகத்தில் வீற்றிருந்து, தேவனுடைய இராஜ்யத்தில் ஆட்சி செய்தார் என்றும் அவர்* [பேதுரு] *கூறினார் (நடபடிகள் 2:24-36). இயேசு "ஆண்டவரும் கிறிஸ்துவும்" ஆக்கப்பட்டிருக்கிறார் (நடபடிகள் 2:36), "கிறிஸ்து" என்பது மேசியா அல்லது "தேவனால் அபிஷேகம் பெற்றவர்" என்று அர்த்தப்படுகிறது. இராஜ்யம் வந்துள்ளது (கொலோசெயர் 1:13; எபிரெயர் 12:28; வெளிப்படுத்தின விசேஷம் 1:9). கிறிஸ்து இப்போது ஆட்சி செய்கிறார் மற்றும் அவர் பிதாவாகிய தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்புவிக்கும் வரைக்கும் ஆட்சி செய்வார் (1 கொரிந்தியர் 15:24-26).*

*இராஜ்யத்துடன் நெருக்கமான தொடர்புடைய வகையில் இயேசு,* ***உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக*** *என்று போதித்தார். பரலோகத்தில் தூதர் சேனையினால் தேவனுடைய சித்தத்திற்குப் பூரணமான ஒத்திசைவு உள்ளது. இயேசுவைப் பின்பற்றுபவர்கள், பூமியில் மக்களின் இருதயங்களில் அதே கீழ்ப்படிதல் ஊடுருவுவதற்காக ஜெபிக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். சீஷர்கள் முதலில் தங்கள் சொந்த வாழ்வை தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்க, இப்படிப்பட்ட ஜெபம் தேவைப்படுகிறது. தாழ்மையான இந்த எண்ணப்போக்கிற்கு மாபெரும் தியாகம் தேவைப்படலாம். இதற்கு ஒப்பான பின்வரும் வார்த்தைகளை கெத்செமெனே தோட்டத்தில் இயேசு உச்சரித்தபின்பு அவரால் நிறைவான விலை செலுத்தப்பட்டது: "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42).*

***வசனம் 11.*** *இயேசு ஆவிக்குரிய விஷயங்களில் இருந்து பூமிக்குரிய விஷயங்களுக்கு விரைவாக மாறுதல் ஒன்றை ஏற்படுத்தினார். அவர்,* ***எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்*** *என்று கூறினார்.* "Daily" *(தமிழ் வேதாகமத்தில் இவ்வார்த்தை மொழிபெயர்க்கப்படாது விடப்பட்டுள்ளது) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள* (*epiousios*) *கிரேக்க*

*வார்த்தையானது (இதன் இணைவிபரமான லூக்கா 11:3ஐத் தவிர) வேதவசனங்களில் வேறு எங்கும் காணப்படுவதில்லை. லூக்கா சுவிசேஷத்தில் "அன்றன்றும்" என்று இவ்வார்த்தை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இச்சொற்றொடர், "போதுமான," "அன்றாட" அல்லது "நாளைக்கான" என்று அர்த்தப்பட முடியும். மிகச்சரியான மொழிபெயர்ப்பு எதுவாக இருந்தாலும், இந்த ஜெபமானது, ஒருவரின் அடிப்படைத் தேவைகளை அளிக்கும்படி தேவனிடத்தில் வேண்டுவதாக உள்ளது. "இன்று" என்பதற்குப்பதிலாக, லூக்கா 11:3ல் "அன்றன்றும்" என்றுள்ளது.*

*வளர்ந்து வரும் நாடுகள் பலவற்றில், மக்கள் ஒவ்வொரு நாளும், அந்த நாளுக்குத் தேவையான உணவைப் பெறுவதற்கு மாத்திரம் போதுமான கூலியைச் சம்பாதிக்க இன்னமும் நாள் முழுவதும் உழைக்கின்றனர். வளம் என்பது மிகவும் அடிக்கடி, தேவனுக்கு நன்றிநிறைந்த உணர்வுடன் இருத்தலில் குறைவுபடுதலுக்கும் அவர் அன்றாடம் சார்ந்திருத்தலில் குறைவு படுதலுக்கும் வழிநடத்துவதாகக் காணப்படுகிறது (உபாகமம் 6:10-12; 8:11-18). தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு வானத்தில் இருந்து மன்னாவைப் பொழிந்தபோது, ஓய்வுநாள் ஆயத்தத்திற்குத் தேவையானது தவிர (யாத்திராகமம் 16:12-31), ஒவ்வொரு நபருக்கும் அன்றாடம் தேவையானதை மாத்திரம் அவர் அளித்தார். ஒருநாளைக்கு வேண்டியதற்கும் அதிகமாக சேகரிக்கப்பட்டால், அந்த மன்னா அடுத்தநாள் காலையில் கெட்டுப்போய் புழுப்பிடித்ததாக இருந்தது. நாளைய தினத்தைப் பற்றிக் கவலைப்படும் மதியீனத்தைக் குறித்து நமக்கு யாக்கோபு போதித்தார், ஏனெனில் நாளைய தினம் என்பது ஒருக்காலும் வராது போகலாம் (யாக்கோபு 4:13-15; காண்க மத்தேயு 6:34).*

***வசனம் 12.*** *இயேசுவின் கூற்றுப்படி, மன்னிப்பு என்பது ஜெபத்தில் அக்கறைக்குரிய இன்னொரு விஷயமாக உள்ளது.* ***கடன்கள்*** *என்பதற்கான* (*opheilēma*) *வார்த்தையானது "பாவம்" என்பதற்கான ஐந்து கிரேக்க வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது (லூக்கா 11:4ஐக் காணவும்), மற்றும் இது புதிய ஏற்பாட்டில் ஒரு சில முறைகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இதன் வினைச்சொல் வடிவமானது முப்பதுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது. பலஸ்தீன நாட்டில் இயேசுவின் நாட்களில் பொதுவான மொழியாக இருந்த அரமாயிக் மொழியில், பாவம் என்பதை "கடன்"* (*hobá*) *என்று குறிப்பிடுதல் வழக்கமாக இருந்தது.*[25] *நாம் யாவருமே தேவனுக்கு* ***கடனாளிகளாக இருப்பதால்,*** *தேவனுடைய கிருபையின் அரியணையை அணுகுவதில் பயன்படுத்துவதற்கு இவ்வார்த்தை ஏற்புடையதாக உள்ளது. இந்த சத்தியத்தை நமக்கு நினைவூட்டவே, மன்னிக்காத வேலைக்காரன் பற்றிய இயேசுவின் உவமை (18:23-35) தரப்பட்டது. மன்னிக்கத் தவறுகிறவர்கள் தேவனால் மன்னிக்கப்பட மாட்டார்கள் என்பது இந்த உவமையில் இருந்து வருகிற இன்னொரு பாடமாக உள்ளது. அதை இயேசு தமது மாதிரி ஜெபத்தில் தெளிவாக்கினார், பின்பு 6:14, 15ல் உள்ள விஷயத்தில் அதை இன்னும் விரிவாக உரைத்தார். நமது பிதாவினிடத்தில் இருந்து நமக்குக் கிடைக்கும் மன்னிப்பு என்பது, நமக்கு எதிராகப் பாவம் செய்தவர்கள் நம்மால் மன்னிக்கப்படத் தகுதியானவர்களாக இருந்தாலும் இல்லை என்றாலும், அவர்களை* ***மன்னிக்க*** *நாம் கொண்டுள்ள மனவிருப்பத்தைச் சார்ந்ததாக உள்ளது. இயேசு மற்றவர்களை - தம்மைச்*

*சிலுவையில அறைந்தவர்களைக் கூட - மன்னித்தது போன்று அவர்களை நாம் மன்னிக்க வேண்டும் (லூக்கா 23:34).*

***வசனம் 13. இயேசு எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்*** *என்று கூறியதன் மூலம் தமது வேண்டுகோள்களை முடித்தார். "சோதனை" என்பதற்கான (peirasmos) கிரேக்க வார்த்தை, தேவனால் தரப்படும் "பரீட்சை"யை அல்லது பிசாசினால் தரப்படும் "சோதனை"யைக் குறிக்க முடியும் (4:1ன் மீதான விளக்கத்தைக் காணவும்). நாம் சோதிக்கப்படும்படி தேவன் அனுமதிக்கிறார். ஆனால், "அவர் ஒருவரையும் சோதிக்கிறவரல்ல" (யாக்கோபு 1:13). நாம் சோதிக்கப்படுவதற்குத் தேவன் அனுமதிக்கும்போது, சாத்தான் நமக்குச் செய்யக்கூடிய விஷயங்களின்மீது வரையறைகளை அவர் வைக்கிறார் (யோபு 1; 2), மற்றும் அவர் "தப்பிக்கொள்ளும்படியான போக்கையும்" அளிக்கிறார் (1 கொரிந்தியர் 10:13).*

*"சோதனைக்குட்படப்பண்ணாமல்" என்பதன் மிகச்சரியான அர்த்தம் பற்றி அடிக்கடி விவாதிக்கப் பட்டுள்ளது. நாம், "தேவன் எவரொருவரையும் சோதனைக்கு உட்படுத்துகிறாரா?" என்று கேட்கிறோம். இருப்பினும், இயேசு "பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" என்பது கவனிக்கப்பட வேண்டும் (4:1). ஆவிக்குரிய வட்டாரத்தில் நடக்கிறவற்றில் அதிகமானவை நமக்கு ஒரு இரகசியமாக இன்னும் இருக்கையில் (எபேசியர் 6:12), "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்க . . . அறிந்திருக்கிறார்" என்று நாம் நிச்சயமாயிருக்க முடியும் (2 பேதுரு 2:9). ஆகையால் இயேசுவின் சீஷர்கள், தாங்கள் "சோதனைக்குட்படாதபடிக்கு" (26:41) மற்றும் "பிசாசு" அல்லது "பொல்லாங்கன்" என்பவனிடத்தில் இருந்து தேவன் விடுதலையை அளிக்கும்படி ஜெபிக்க வேண்டும் (NIV) .*

*பிற்காலத்திய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகள் இந்த உபதேசத்தை உள்ளடக்குகின்றன. இதை NASB வேதாகமம் அடைப்புக் குறிகளுக்குள் வைத்துள்ளது. "**[ராஜ்யமும், வல்லமையும், மகிமையும், என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.]**" இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட Didache என்ற கிறிஸ்தவப் புத்தகம், பின்வரும் குறுகிய முடிவைக் கொண்டுள்ளது: "வல்லமையும், மகிமையும், என்றென்றைக்கும் உம்முடையவையே."[26] ஜெபத்தின் தொடக்கத்தில் ("இராஜ்யம்," "வல்லமை" மற்றும் "மகிமை" என்பவற்றைப் பற்றிய) உபதேசத்தின் ஆய்வுக்கருத்தின் கண்ணாடி காணப்படுகிறது (6:9, 10).*

### *நிபந்தனைக்கு உட்பட்ட மன்னிப்பு (6:14, 15)*

***[14]மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.***
***[15]மனுஷதப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.***

***வசனங்கள் 14, 15. மன்னிப்பு*** *என்பதற்கான (aphiēmi) கிரேக்க வார்த்தை,*

*"புறம்பே எறிந்து விடுதல்," "நீக்கிப்போடுதல்" அல்லது "மன்னித்தல்" என்று அர்த்தப்படுகிறது. நாம் பாவம் செய்து தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கும்போது, அவர் நம்மிடத்தில் இருந்து பாவத்தை நீக்கிப்போட்டு அதைப் புறம்பே எறிந்து விடுகிறார். பாவத்தை அவர் மறக்காது இருக்கையில், அவர் நமக்கு எதிரான பாவத்தை இன்னமும் வைத்துக்கொண்டிருப்பது இல்லை, மற்றும் அது ஒருக்காலும் நடைபெறவில்லை என்பது போன்று அவர் நம்மிடம் மறுசெயல் செய்கிறார்.*[27]

***தப்பிதங்கள்*** *என்பது paraptōma என்ற வார்த்தையின் பன்மைப் பதத்தில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது, இது "மீறுதல்கள்" என்றும் தரவழைக்கப்பட முடியும். இவ்வார்த்தை, சுவிசேஷப் புத்தகங்களில் இவ்விடத்திலும் மாற்கு 11:25, 26லும் மாத்திரமே பயன்படுத்தப் பட்டுள்ளது. இது "தவறான அடிவைப்பு," "இடறுதல்" அல்லது "விழுதல்" என்ற கருத்தைக் கொண்டுள்ளது. 12ம் வசனத்தில் உள்ள "கடன்" (opheilēma) என்ற வார்த்தையைப் போன்றே, இதுவும் "பாவம்" என்பதற்கான இன்னொரு சொற்றொடராக உள்ளது.*

*தேவனிடத்தில் இருந்து நமக்குக் கிடைக்கும் மன்னிப்பு என்பது, நமக்கு எதிராகப் பாவம்* ***செய்தவர்களை மன்னிக்க,*** *நாம் கொண்டிருக்கும் மனவிருப்பத்தைச் சார்ந்ததாக உள்ளது. நாம் பிறரை மன்னியாதிருந்தால்* ***தேவன் நம்மை மன்னிக்க மாட்டார்.***

## *உபவாசம் (6:16-18)*

***16 நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***17 நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தை கழுவு.***

***18 அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.***

*கொடுத்தல் (6:2-4) மற்றும் ஜெபித்தல் (6:5-15) ஆகியவற்றைப் பற்றிக் கலந்துரையாடிய பின்பு இயேசு, தமது சீஷர்கள் ஈடுபட வேண்டிய மூன்று பிரதான ஆவிக்குரிய ஒழுங்குகளில், மூன்றாவது ஒழுங்கான உபவாசம் என்ற கருத்தை (6:16-18) எடுத்தார். மீண்டும் ஒருமுறை அவர்கள், மனிதர்களால் கவனிக்கப்படும்படி தங்கள் நீதியின் செயல்களைச் செய்யாதிருக்கும்படி எச்சரிக்கப்பட்டனர்.*

***வசனம் 16.*** *இயேசு, உபவாசம் பற்றிய நமது கலந்துரையாடலை,* ***நீங்கள் உபவாசிக்கும்போது*** *என்ற சொற்றொடருடன் தொடங்கினார். தர்மம் கொடுத்தல் (6:2) மற்றும் ஜெபித்தல் (6:5) என்ற யூத பழக்கங்களைப் போன்றே, உபவாசம் என்பதும் தமது சீஷர்கள் ஏற்கனவே செய்துகொண்டிருந்த செயலாக இருந்தது என்று இயேசு யூகித்தார்.*

*"உபவாசம்" என்பதற்கு tsum என்பதே பழைய ஏற்பாட்டு எபிரெய வார்த்தையாக உள்ளது. உபவாசத்தின் கருத்து, பாவநிவர்த்தி நாளில்* ("afflict"; KJV) *ஆத்துமாவைத் தாழ்த்துதல் பற்றிய விஷயத்தில் விளக்கப் பட்டது (லேவியராகமம் 16:29-31). நியாயப்பிரமாணத்தில் இது ஒன்று மாத்திரமே உபவாசத்திற்கான ஒரே கட்டளையாக இருந்தது, ஆனால் நூற்றாண்டுகள் கடக்கையில் உபவாசத்திற்கான மற்ற நாட்களும் ஏற்படுத்தப்பட்டன. யூதப் பாரம்பரியம், "பாவநிவாரண நாளன்று, (1) உண்ணுதல், (2) குடித்தல், (3) குளித்தல், (4) எவ்வகையான எண்ணெயையும் பூசிக்கொள்ளுதல், (5) காலணியை அணிந்து கொள்ளுதல், அல்லது (6) உடல் உறவில் ஈடுபடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டது.*[28]

*பழைய ஏற்பாட்டு உபவாசங்களில் சில, எப்போதாவது கடைப்பிடிக்கப் பட்டவையாகவும் அசாதாரணமானவையாகவும் இருந்த வேளையில், மற்றவைகள் முறையான அடிப்படையில் கடைப்பிடிக்கப் பட்டன. வியாதி, புலம்புதல், பேரிடர், பாவத்திற்கான வருத்தம் மற்றும் பிற இடர்ப்பாடான சூழ்நிலைகள் ஆகியவற்றிற்காக உபவாசம் கடைப்பிடிக்கப் பட்டது (சங்கீதம் 35:13ஐக் காணவும்). தாவீதின் மகன் வியாதிப்பட்டு மரணத்தருவாயில் இருந்தபோது, தாவீது உபாவாசித்தார் (2 சாமுவேல் 12:16-23). அவர், சவுலுக்காவும் அவரது மகன்களுக்காகவும், யாபேசின் மக்களுடன் சேர்ந்து ஏழுநாட்கள் உபவாசித்தார் (1 சாமுவேல் 31:12, 13; 2 சாமுவேல் 1:11-16). மோசேயும் தானியேலும், தேவனிடம் இருந்து வெளிப்படுத்துதலைப் பெற்றுக்கொள்ளும் முன்பு உபவாசித்தனர் (யாத்திராகமம் 34:28; தானியேல் 9:3). எலியா யேசபேலின் கோபத்திற்குத் தப்பிக்கொள்ளும்படி ஓடியபோது உபவாசித்தார் (1 இராஜாக்கள் 19:8). கொடுமைக்காரனான ஆகாப்கூட, அவனது பாவங்களுக்காகத் தேவன் அவன்மீது ஒரு சாபத்தைக் கொண்டுவரப் போகிறார் என்று அறிவிக்கப்பட்ட போது உபவாசித்தான். அவனது மனவருத்தத்தை மதித்த தேவன், சாபத்தை அனுப்பாதிருந்தார் (1 இராஜாக்கள் 21:27). பழைய ஏற்பாடு, குழு மற்றும் நாட்டளவிலான உபவாசத்திற்கு உதாரணங்களைக் கொண்டுள்ளது (யோசுவா 7:6; நியாயாதிபதிகள் 20:24-28; 1 சாமுவேல் 7:6; 2 நாளாகமம் 20:3; எஸ்றா 8:21-23; நெகேமியா 9:1; யோனா 3:5). யூதர்கள் பாபிலோனுக்கு அடிமைத்தளையில் கூட்டிச்செல்லப்பட்டபோது, அவர்கள் தங்கள் பாவங்களின்மீது தங்களின் கசப்புணர்வைக் காண்பிக்க, உபவாச வேளைகளை நியமித்தனர். நான்காம், ஐந்தாம், ஏழாம் மற்றும் ஒன்பதாம் மாதங்களில் உபவாசங்கள் கடைப்பிடிக்கப்பட்டன என்று சகரியா தீர்க்கதரிசனம் குறிப்பிட்டது (சகரியா 7:1-7; 8:19).*

*"உபவாசம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (nēsteuō) கிரேக்க வார்த்தையும் அதன் தொடர்புடைய பெயர்ச்சொற்களும், புதிய ஏற்பாட்டில் சுமார் முப்பது முறைகள் காணப்படுகின்றன. இவ்வார்த்தைகள், உணவு அல்லது பானத்தில் இருந்து விலகி இருத்தலைக் குறிப்பிடுகின்றன. உபவாசம் என்பது மிகவும் அடிக்கடி, ஆவிக்குரிய நோக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இது ஏற்ற வகையில் செய்யப்படும்போது, ஒரு நபரை தேவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவருகிறது. அதுபோன்றே, இது ஜெபத்துடனும் அடிக்கடி தொடர்புபடுத்தப் படுகிறது (லூக்கா 2:37; 5:33; நடபடிகள் 13:3; 14:23). உபவாசம் என்பது காட்சிப்படுத்துவதற்கானது அல்ல; இது*

ஆழ்ந்த மனவருத்தம் மற்றும் இருதயத்தின் பரிசுத்தமான எண்ணப்போக்கு, நிலைப்பாடு ஆகியவற்றிற்குச் சாட்சியமாக உள்ளது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்து மரித்த இயேசு, சாத்தானைச் சந்திப்பதற்கு முன்னர் (4:2) நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசித்தார். அவர் தமது சீஷர்களுக்கு உபவாசிக்கும்படி கட்டளையிடவில்லை. இருப்பினும் தம்மைப் பின்பற்றுபவர்கள் உபவாசிப்பார்கள் என்று அவர் மறைமுகமாக உணர்த்தினார்.

தொடக்ககால சபையார் முறையாக உபவாசித்ததாகக் காண்பிக்கும் உதாரணம் எதையும், புதிய ஏற்பாட்டில் நாம் காண்பதில்லை. முதல் சுவிசேஷப் பயணத்தில் பவுலையும் பர்னபாவையும் அனுப்பியது (நடபடிகள் 13:2) மற்றும் சபைக்குழுமத்தில் ஊழியம் செய்வதற்கு மூப்பர்களை நியமித்தது (நடபடிகள் 14:23) போன்ற முக்கியமான முடிவுகளை மேற்கொள்வதற்கு முன்னர், கிறிஸ்தவர்கள் உபவாசித்தனர்.

கிறிஸ்து வந்தபோது, பரிசேயர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசித்தனர் (லூக்கா 18:12), இதை வழக்கமாக அவர்கள், திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் செய்தனர், ஏனெனில் அவைகள் சந்தை நாட்களாக இருந்தன.[29] இது அவர்களுக்கு, தங்கள் தேவபக்தியைக் கொண்டு பொதுமக்களை மனம் ஈர்க்க வாய்ப்பு ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தது. இயேசு குறிப்பிட்ட மக்கள் [பரிசேயர்கள்] உபவாசிக்கையில் [மற்றவர்களால்]கவனிக்கப்படும்படி, **தங்கள் முகங்களை வாடப்பண்ணி தங்கள் தோற்றத்தைப் புறக்கணிப்பார்கள்.** அவர்கள் வாரி ஒழுங்குபடுத்தப்படாத தலைமுடியுடன், சுருங்கிய உடைகளை அணிந்துகொண்டு, தங்கள் முகங்கள் வெளிறியதாகக் காணப்படுவதற்காக, வெண்மையான மாவைப் பூசிக்கொள்வார்கள். தேவனுக்கு முன்பாகத் தாழ்மையாக இருப்பதாக வெளியரங்கமாக நடித்த இப்படிப்பட்ட **மாயக்காரர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று** இயேசு மீண்டும் ஒருமுறை கூறினார்.

***வசனங்கள் 17, 18.*** இதற்கு நேர்மாறான வகையில் இயேசு, தமது சீஷர்கள் தாங்கள் உபவாசிப்பதை மற்றவர்களுக்குத் தெளிவாகக் காட்டக்கூடாது என்று கூறினார். யூதப்பாரம்பரியத்திற்கு எதிராகச் சென்ற நிலையில் அவர், தமது சீஷர் உபவாசிக்கும்போது, [தனது] **தலைக்கு எண்ணெய் பூசி** [தனது] **முகத்தைக் கழுவ** வேண்டும் என்று கூறினார்.[30] ஒருவர் தமது நீதியை இரகசியமானதாக வைத்துக் கொள்வதற்கு, தமது சமகாலத்தியவர்களை கண்டிப்பான உபவாசத்தின் கூறுகளாகக் கருதிய வழக்கமான அம்சங்களுக்கு நேர் எதிராகச் சென்றார் என்பது தெளிவு.[31] சில வேளைகளில் ஒருவர் தமது உபவாசத்தை முற்றிலும் இரகசியமாக வைத்துக்கொள்ளுதல் என்பது கடினமானதாக இருக்கும் (6:4, 6 வசனங்கள் மீதான விளக்கங்களைக் காணவும்) என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே, ஆனால் அதை இரகசியமாகச் செய்யச் சீஷர் நாடவேண்டும். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் தங்கள் நீதியின் செயல்களை வெளியரங்கமாகச் செய்யலாகாது என்பதே கருத்தாக உள்ளது. அவர்கள் தாழ்மையாக உபவாசித்தால், தேவன் அவர்களுக்குப் பலன் அளிப்பார்.

# இருதயத்தில் இருந்து கொடுத்தல் *(6:2-4)*

மத்தேயு 6:1-18ல் இயேசு, கொடுத்தல், ஜெபித்தல் மற்றும் உபவாசித்தல் உட்பட, நீதியான செயல்களை நிகழ்த்துதல் பற்றிக் கலந்துரையாடினார் (6:2-4), கொடுத்தல் பற்றி நாம் மூன்று பாடங்களைக் கற்றறிகிறோம்.

*முதலாவது நாம், நம்மைச் சுற்றி இருப்பவர்களால் காணப்படுவதற்காக அல்ல, ஆனால் தேவன் மீதான அன்பின் நிமித்தமாக, கொடுக்க வேண்டும்.* மற்றவர்களை மனம் ஈர்ப்பதற்காகக் கொடுத்தல் என்பதற்கு எதிராக இயேசு தமது சீஷர்களை எச்சரித்தார். அனனியா மற்றும் சப்பீராள் ஆகியோரின் வரலாறு இந்தக் கொள்கையை நன்கு விவரிக்கிறது. அந்தத் தம்பதியர் தங்கள் நிலத்தை விற்றனர், அதன் பின்பு அனனியா, அந்தத் தொகையில் ஒரு பகுதியை, அப்போஸ்தலர்களின் பாதங்களில் வைத்தார். அவர் தமக்கென்று ஒரு பகுதிப் பணத்தை வைத்துக்கொண்டு, அதேவேளையில் எல்லாப் பணத்தையும் கொடுத்ததாக நடித்தார். அவர் தமது மனைவி அறிய இதைச் செய்தார். அவர்கள் இணைந்து செய்த இந்த வஞ்சனைக்கு மரணமே விளைவாக இருந்தது; அவர்களின் மாய்மாலத்தைத் தேவன் ஒரு உதாரணமாக ஏற்படுத்தினார் (நடபடிகள் 5:1-11). மற்றவர்களால் காணப்படும்படி கொடுப்பவர்கள் "தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று" - அதாவது, மனிதர்களின் பாராட்டுதல் மாத்திரமே அவர்கள் பெற்றுக்கொள்ளும் பலனாக இருக்கும் என்று - இயேசு கூறினார். இதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்களின் கொடுத்தல் என்பது தேவன்மீதான அன்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். யோவான், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" என்று எழுதினார் (1 யோவான் 4:19). தேவனைக் கனப்படுத்துவதற்காக நாம் கொடுக்கும்போது, அவர் நிறைவாக நமக்குப் பலன் அளிப்பார்.

*இரண்டாவது நாம், விவேகமான முன்னெச்சரிக்கையுடன் கொடுக்க வேண்டும்.* இயேசு, "உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது" என்று இயேசு கூறினார். கொடுத்தல் என்பது சாத்தியமான அளவிற்கு இரகசியமாகச் செய்யப்பட வேண்டும் என்று கூறுவதற்கான பழமொழி சார்ந்த வகையாக இது இருக்கலாம். நாம் கொடுக்கும்போது, மற்றவர்களுக்கு முன்பாக நமது தாராளத் தன்மையைக் காட்சிப்படுத்தக் கூடாது.

*மூன்றாவது நாம், உண்மையாகவே மற்றவர்களுக்கு உதவுவதற்காகக் கொடுக்க வேண்டும்.* சந்தர்ப்பப்பொருள்ரீதியாக இயேசு, ஏழைகளுக்குத் தர்மம் கொடுத்தல் என்ற யூதத்துவ நடைமுறை பற்றியே இவ்விடத்தில் பேசினார். இயேசு தாமே, பரிவிரக்கத்திற்கு மாதிரியாக இருந்து, பல தேவைகள் குறித்து அக்கறை எடுத்துச் செயல்பட்டார். இந்தப் பிரச்சனைகளில் சில உடல்ரீதியானவையாக (பசி, வியாதி, நோய் மற்றும் மரணம் ஆகியவையாக) இருந்த வேளையில், மற்றவை ஆவிக்குரியவையாக (அறியாமை, அசுத்த ஆவி பிடித்திருத்தல் மற்றும் ஆவிக்குரிய மரணம்

ஆகியவையாக) இருந்தன. நமது கொடுத்தலும், மற்றவர்களின் துன்புறுதல்களில் இருந்து அவர்களை எழுப்புதலை நோக்கம் கொண்டிருக்க வேண்டும். யாக்கோபு, "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" என்று எழுதினார் (யாக்கோபு 1:27). "விசாரிக்கிறது" என்பதன் மூலம் தாம் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை அவர் காண்பித்தார்: "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?" (யாக்கோபு 2:15, 16). தேவையில் உள்ள மக்கள்மீது பரிதாப உணர்வுகள் கொண்டிருத்தல் என்பது அவர்களுக்கு உதவுவதே இல்லை, அவர்களின் துன்பத்தை நீக்க நாம் சிலவற்றைச் செய்ய வேண்டும். புண்பட்டவர்கள் மீது உண்மையான பரிவிரக்கம் கொண்டிருத்தல் என்பது அவர்களின் தேவைகளில் உதவ நம்மை வழிநடத்தும் என்பதை இயேசுவின் போதனை மறைமுகமாக உணர்த்துகிறது.

நமது கொடையானது தேவனுடைய கண்களில் மதிப்பிடப்படுவதற்கு, மனிதரின் கண்களில் பெரியதாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. ஏழை விதவையின் காணிக்கையான, "ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசுகள்" இயேசுவின் கவனத்தை ஈர்த்தது (மாற்கு 12:41-44). உண்மையான ஈகைப்பண்பு என்பது, ஒரு உடை இதமான உணவு அல்லது ஒரு கலசம் தண்ணீர் ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கலாம் (10:42; 25:34-40).

## ஜெபம் (6:5-8)

நாம் கேட்பதற்கு முன்பே, நமது தேவை என்ன என்பதை, பிதாவானவர் அறிந்திருக்கிறார் என்பதால், நாம் ஏன் கேட்க வேண்டும்? நமது தேவை என்ன என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார், ஆனாலும் அவருடன் நாம் பேச வேண்டும் என்று அவர் இன்னமும் விரும்புகிறார் (7:7; பிலிப்பியர் 4:6). சிலவேளைகளில் அவர், நாம் மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும் என்று விரும்புகிறார். இந்த சத்தியத்தை விவரிப்பதற்கு இயேசு, இரண்டு உவமைகளைக் கூறினார், அவற்றில் ஒன்று நள்ளிரவில் வந்த நண்பனைப் பற்றியதும் (லூக்கா 11:5-10) மற்றொன்று விடாப்பிடியாகக் கேட்ட விதவை பற்றியதும் (லூக்கா 18:1-8) ஆகும். இயேசு ஒரே விஷயத்திற்காக கெத்செமெனே தோட்டத்தில் மூன்று முறை ஜெபித்தார் (26:36-46). பவுல் தமது "மாம்சத்திலே இருந்த ஒரு முள்" நீக்கப்பட வேண்டும் என்று மூன்று முறை ஜெபித்தார் (2 கொரிந்தியர் 12:7-10). ஜெபத்தை விட்டு முற்றிலும் விலகுவதற்கான நமது விருப்பத்தின்மீது தேவன் கொண்டுள்ள கவலைமிக்க அக்கறையானது, நமது ஜெபங்களின்நீளம் மற்றும் பொருட்சுருக்கம் ஆகியவற்றின் மீது அவர் கொண்டுள்ள அக்கறையை விட அதிகமானது. நமது விருப்பங்களுக்கு இணங்கும்படி நாம் தேவனை ஆட்டிப்படைக்க முடியாது, ஆனால் சில வேளைகளில் அவர், ஒரு குறிப்பிட்ட ஜெபத்திற்கு அவரது பதில் நமக்கு எவ்வளவு அவசியமாகத் தேவை என்பதைப்

புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

சரியான வகையில் ஜெபித்தலில், உண்மையான இருதயமும் தூய்மையான நோக்கங்களும் அடங்கியுள்ளது. இதில், தேவன் தமது பிள்ளைகளுக்கு மிகச்சிறந்தது என்று நினைக்கும் வழியில் ஜெபிக்கும் ஒவ்வொரு ஜெபத்தையும் அவர் கேட்கிறார் என்ற நம்பிக்கையுடன் ஜெபித்தலும் உள்ளடங்குகிறது (1 யோவான் 5:14, 15). நாம் எப்போதுமே, "தேவனுடைய சித்தத்தின்படி" ஜெபிக்க வேண்டும். நாம் அவரது சித்தத்தைச் செய்யாத வரையிலும், "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று உண்மைத்தன்மையுடன் ஜெபிக்க இயலாது. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிப்பதற்கு, அவரது சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ள நாம் அவரது வசனத்தைப் படிக்க வேண்டும். நாம் "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று உண்மைத்தன்மையுடன் ஜெபிக்கும்போது, அவர் எப்போதுமே நமது ஜெபங்களைக் கேட்கிறார். அவர், "ஆம்," "இல்லை" அல்லது "சற்றே காத்திரு" என்று கூறலாம், ஆனால் அவர் தமது மக்களின் ஜெபங்களுக்கு எப்போதுமே பதில் அளிக்கிறார்.

## மாதிரி ஜெபம் (6:9-13)

இயேசு தமது சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தபோது அவர், இன்றைய நாட்களில் நமது ஜெபங்களின் பாகமாக இருக்க வேண்டிய ஐந்து கூறுகளை ஒன்றிணைத்தார்.

*முதலாவது நாம், பிதாவுக்குத் துதிகளைச் செலுத்த வேண்டும்* (6:9). நம்மைப் படைத்தவர் நிலைநிறுத்துபவர் மற்றும் மீட்பவர் என்ற வகையில் தேவன் துதிக்கப் பாத்திரராக இருக்கிறார். அவரது அன்பு, பரிசுத்த தன்மை மற்றும் கிருபை என்ற பண்புகளுக்காக அவரை நாம் துதிக்க வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 4:8-11).

*இரண்டாவது நாம், இராஜ்யத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்* (6:10). சபை என்ற இராஜ்யத்தை இயேசு ஏற்கனவே நிலைநாட்டியுள்ளார் (16:18, 19; நடபடிகள் 2). இருப்பினும், இராஜ்யத்தின் வளர்ச்சிக்காக, நமது ஊழியக்காரர்களுக்காக மற்றும் தேவனுடைய வசனத்தைப் பரப்புவதற்கு உண்மையுடன் முயற்சி செய்யும் ஒவ்வொரு பிரசங்கியார் மற்றும் போதகருக்காக, நாம் இன்னமும் ஜெபிக்க முடியும்.

*மூன்றாவது நாம், உணவு அளிக்கும்படி கேட்க வேண்டும்* (6:11). நமக்குத் தேவையான பொருட்கள் பற்றி தேவன் ஏற்கனவே அறிந்துள்ளார் (6:32), ஆனால் - உணவு, உடை மற்றும் உறையுள் போன்ற - வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக, நாம் அவரை ஜெபத்தில் அணுக வேண்டும். கடந்த காலத்தில் அவர் ஏற்கனவே செய்துள்ளவற்றிற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் அவர் நம்மை நிலைநிறுத்தும்படி அவரிடம் நாம் கேட்க வேண்டும்.

*நான்காவது நாம், பாவத்திற்கு மன்னிப்பை நாட வேண்டும்* (6:12). கிறிஸ்தவர்களாகிய நாம், கடந்தகாலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப் பட்டிருந்தாலும், தேவனுடைய எதிர்பார்ப்புகளில் இருந்து நாம் தொடர்ந்து விழுந்து குறைவுபடுகிறோம். கிறிஸ்துவினுடைய இரத்தம் தொடர்ந்து நம்மை கழுவுதல் தேவைப்படுகிறது மற்றும் நாம் ஜெபத்தில் மன்னிப்புக் கேட்க

வேண்டும் (1 யோவான் 1:7-10). தேவன் நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தால், மற்றவர்களை மன்னிக்கும் ஆவியை நாம் காட்சிப்படுத்த வேண்டும்.

*ஐந்தாவது நாம், பொல்லாங்கில் இருந்து பாதுகாப்பிற்காக வேண்டுதல் செய்ய வேண்டும்* (6:13). நம்மைச் சுற்றிலும் கொந்தளிக்கும் ஆவிக்குரிய யுத்தம் பற்றி நாம் நிலையான எச்சரிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும் (எபேசியர் 6:10-20) மற்றும் சோதனையில் இருந்து பாதுகாக்கும்படியும் நாம் எதிர்கொள்ளும் சோதனைகளைப் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வெற்றிகொள்ளும்படி பலம் தரும்படியும் தேவனிடத்தில் கேட்க வேண்டும்.

டேவிட் ஸ்டீவர்ட்

## மாதிரி ஜெபத்தை அப்படியே திரும்ப ஜெபித்தல் (6:9-13)

மாதிரி ஜெபம் என்பது திரும்பத் திரும்ப அப்படியே அதை ஜெபித்தல் என்ற நோக்கத்தை ஒருக்காலும் கொண்டிருக்கவில்லை. ஜெபத்தின் அடிப்படைகளைக் கற்றுக்கொள்ளும்படி கர்த்தரின் சீஷர்களுக்கு அது ஒரு உதாரணமாகக் கொடுக்கப்பட்டது (லூக்கா 11:1-4). இந்த ஜெபத்தை தொடர்ந்து மனப்பாடமாக ஒப்புவித்தல் என்பது, "வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்" என்று இயேசு ஏற்கனவே கூறியதை மீறுதலாக இருக்கும் (6:7). மிகவும் அடிக்கடி அலப்புதலாக சொல்லப்பட்டதால் தங்கள் அர்த்தத்தை இழந்து போனவைகளான, பொருளறியாது மனப்பாடமாக ஒப்புவிக்கப்பட்ட பல ஜெபங்கள், யூதர்களிடம் ஏற்கனவே இருந்தன. ஜெபப் புத்தகங்களைப் பயன்படுத்துகிறவர்கள் அதே விஷயத்தையே செய்வதாகத் தோன்றுகிறது. அவர்கள், வார்த்தைகளை வெறுமனே வாசித்தல் அல்லது அவற்றின் உண்மையான அர்த்தம் பற்றிய எவ்வித சிந்தனையும் இன்றி சொற்களைச் சொல்லுதல் ஆகியவற்றில் முடிந்துபோகலாம். இருதயத்தில் இருந்து உண்மைத்தன்மையுடன் ஜெபிக்கப்படாது, சொற்றொடர்களைத் தொடர்ந்து திரும்பத் திரும்ப நாம் கூறும்போது, அதே விஷயத்தையே நாமும் செய்யக்கூடும். தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், இயேசுவின் மாதிரி ஜெபத்தை மனப்பாடமாக ஒப்புவித்ததாக, புதிய ஏற்பாட்டில் - சுவிசேஷங்களில், அப்போஸ்தலருடைய நடபடிகளில் அல்லது நிருபங்களில் - எவ்விடத்திலும் நாம் காண்பதில்லை.[32] வேதவாக்கியங்களின் வேறு எந்த வசனப்பகுதியையும் போலவே, இவ்வார்த்தைகளையும் மனப்பாடம் செய்து இவற்றைத் திரும்பத் திரும்பக் கூறுதல் அல்லது இவற்றின் அர்த்தத்தை சிந்தித்துப் பார்த்தல் என்பது, இன்றைய நாட்களில் நமக்கு நிச்சயமாகவே பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும் இது திரும்பத்திரும்ப சடங்காச்சாரமான முறையில் ஜெபிக்கப்பட வேண்டும் என்று இயேசு ஒருக்காலும் நோக்கம் கொண்டிருக்கவில்லை.

## "எங்கள் பிதாவே" (6:9)

தேவனுடைய குடும்பத்தில் "மறுபடியும் பிறந்துள்ளவர்கள்" மாத்திரமே அவரை ஆவிக்குரிய பிதாவாகக் கொண்டுள்ளனர் (யோவான் 3:3; மத்தேயு 23:9). ஒரு கருத்தில், எல்லா மக்களுமே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்,

*ஏனெனில் அவரே தலைமுறைதோறும் நம்மைப் படைத்துள்ளார்; ஆனால் "மறு உருவாக்கத்தினால்" அவரிடத்தில் வருகிறவர்களே அவரது ஆவிக்குரிய பிள்ளைகளாக உள்ளனர். இன்றைய நாட்களில் சிலர், விசுவாசத்தினால் மாத்திரம் தேவனுடைய "மகன் என்ற உரிமையை" கோர விரும்புகின்றனர், ஆனால் அது போதுமானதாக இருப்பதில்லை (கலாத்தியர் 3:26, 27). சிலர் புதிய பிறப்பிற்குத் தண்ணீரின் அவசியத்தை விட்டுவிட விரும்புகின்றனர், ஆனால் "ஜலத்தினாலும் ஆவியினாலும்" மறுபடியும் பிறக்காமல் (யோவான் 3:5) தேவனுடைய ஆவிக்குரிய மகனாக அல்லது மகளாக இருத்தல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது. தேவனுக்கு, தத்துப்பிள்ளைகள் என்று யாரும் இருப்பதில்லை. பதில் அளிக்கப்படும் ஜெபம் பற்றிய வாக்குத்தத்தம் என்பது, தேவனுடைய பிள்ளைகளாக இருத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது (1 பேதுரு 3:12; 1 யோவான் 5:14, 15). நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால், தேவன் நமது பிதாவாக இருக்கிறார் - அவர் "பரலோகத்தில் இருக்கிற நமது பிதாவாக இருக்கிறார்." நாம் ஜெபிக்கும்போது, பரலோகத்தின் வள ஆதாரங்கள் யாவையும் நமக்கு வர வாய்ப்புள்ளவையாக உள்ளன. பவுல், "அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" என்று எழுதினார் (எபேசியர் 1:3). தேவன் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்புகிறார் (7:7-11).*

## *"உம்முடைய ராஜ்யம் வருவதாக" (6:10)*

*வரவிருந்த இராஜ்யத்திற்கான ஜெபத்திற்கு, பெந்தெகொஸ்தே நாளில் பதில் அளிக்கப்பட்டது (நடபடிகள் 2). இன்றைய நாட்களில் இராஜ்யத்தின் வருகைக்காக ஜெபித்தல் என்பது கிறிஸ்தவர்களுக்கு ஏற்புடையதல்ல என்றாலும், தேவனுடைய சித்தம் "பரலோகத்தில் செய்யப்படுவது போலப் பூமியிலும் செய்யப்பட வேண்டும்" என்று ஜெபித்தல் நமக்கு நல்லதாக உள்ளது. இராஜ்யம் இப்போது இங்கு இருக்கும் நிலையில், தேவனைக் கனப்படுத்துகிறவர்களால், தேவனுடைய சித்தம் இந்த பூமியில் செய்யப்படுகிறது. தேவன் இராஜரீகம் செய்கிறார், ஆனால் அவர் மனிதகுலத்திற்குச் சுயாதீனமான சித்தத்தைக் கொடுத்தார். இது, நாம் அவரது சித்தத்தைச் செய்ய அல்லது செய்யாதிருக்கத் தேர்ந்துகொள்ள முடியும் என்று அர்த்தப்படுத்துகிறது.*

*இந்த சந்தர்ப்பப் பொருளின் அடிப்படையில், இன்றைய நாட்களில் நாம் ஜெபிக்க வேண்டியது என்ன? முதலாவது, நம்மில் ஒவ்வொருவரும், நமது வாழ்வில் தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக ஜெபிக்க வேண்டும். இரண்டாவது, அவரது சட்டம் பரலோகத்தில் ஆளுகை செலுத்துவது போன்றே, பூமியில் ஆளுகை செலுத்த வேண்டும் என்று ஜெபித்தல் சரியானதாக உள்ளது. கணக்கு ஒப்புவிக்க வேண்டிய ஒவ்வொரு நபரும் தமது சித்தத்தைப் பிதாவின் சித்தத்திற்கு இணங்கச் செய்ய வேண்டும் என்பதற்காக நாம் எப்போதும் ஜெபிக்க வேண்டும்.*

## *உபவாசத்திற்கான காரணங்கள் (6:16-18)*

*உபவாசிக்கும்படி கிறிஸ்தவர்களுக்குக் கட்டளை எதுவும்*

*இல்லாத நிலையில், இயேசுவின் சீஷர்கள் உபவாசிப்பார்கள் என்று இயேசுவின் வார்த்தைகள் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன என்பது உறுதியானதாக உள்ளது. இந்த நடைமுறையைப் புறக்கணிப்பதன் மூலம் நாம், உலகத்திற்குரிய மற்றும் ஆவிக்குரிய பல பயன்களைத் தவறவிடலாம். உபவாசத்தில் ஈடுபடுவதற்குச் சில நல்ல காரணங்கள் இங்கு தரப்படுகின்றன:*

1. *தேவனுடைய பார்வையில் நம்மைத் தாழ்த்த (1 இராஜாக்கள் 21:27-29; எஸ்றா 8:21; சங்கீதம் 35:12, 13).*
2. *நாம் ஜெபிக்கத் தேவையான விஷயங்கள் பற்றிய குறிப்பிட்ட அக்கறை மீது கவனம்குவிக்க.*
3. *நமது வாழ்வில் ஆவிக்குரிய விஷயங்களுக்கு முதலிடம் கொடுக்க. உபவாசித்தல் என்பது, நாம் இந்த உலகத்து விஷயங்களினால் ஈர்க்கப்படுதலைக் குறைக்கவும் ஆவிக்குரிய விஷயங்களினால் ஈர்க்கப்படுவதை அதிகரிக்கவும் நமக்கு உதவ முடியும்.*
4. *நமது சுயகட்டுப்பாட்டையும் சோதனையைத் தாங்கி நிற்கக்கூடிய நமது திறனையும் அதிகரிக்க. உபவாசமானது, சுயகட்டுப்பாட்டை மேம்படுத்தும்படி நம்மை வழிநடத்தக்கூடும், மேம்படுத்தப்பட்ட சுயகட்டுப்பாடு என்பது, ஆவிக்குரிய வகையில் அதிக பக்குவத்திற்கு நம்மை வழிநடத்தக்கூடும், மற்றும் ஆவிக்குரிய பக்குவம் என்பது தேவனுடன் இன்னும் அதிக நெருக்கமாக இருப்பதற்கு நம்மை வழிநடத்தக்கூடும்.*

---

*குறிப்புகள்*

[1]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 207. *தோபித்து 12:8ம் வசனம், "தர்மம் செய்தல்," "ஜெபம்" மற்றும் "உபவாசம்" ஆகியவற்றை ஒன்றாகக் குறிப்பிடுகிறது, ஆனால் அது "நீதியை" ஒரு தனிப்பட்ட விஷயமாகவும் உள்ளடக்குகிறது.* [2]Michael J. Wilkins, "Matthew," *in Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 43. [3]*தோபித்து 12:9* (NRSV). [4]Mishna *Shekalim* 2.1; 6.1, 5. [5]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 98-99. [6]Ibid., 99. [7]Sirach 1:29. [8]Wilkins, 44. [9]Ceslas Spicq, *Theological Lexicon of the New Testament*, trans. and ed. James D. Ernest (Peabody, Mass.: Hendrickson Publishers, 1994), 1:162-64. [10]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 102.

[11]Mishnah *Shekalim* 5.6. [12]Talmud *Baba Bathra* 9b. [13]Ibid., 10b. [14]David Hill, *The Gospel of Matthew,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 133. [15]*காண்க* Josephus *Antiquities* 14.4.3. [16]*Didache* 8.3. [17]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991) 54-55. [18]Leon Morris, *The Gospel according to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 141, n. 22. [19]*ஒரு ரபீ அவர்கள், "பெருக்கமாக ஜெபிக்கும் ஒவ்வொரு ஜெபமும் கேட்கப்படுகிறது" என்று கூறினார்* (John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica:*

*Matthew-1 Corinthians*, vol. 2, *Matthew-Mark* [Oxford: Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979], 145). [20]Keener, 213; citing John E. Stambaugh and David L. Balch, *The New Testament in Its Social Environment*, Library of Early Christianity, vol. 2 (Philadelphia: Westminster Press, 1986), 129.

[21]Mounce, 55. [22]Wilkins, 44-45. [23]John R. W. Stott, *The Message of The Sermon on the Mount (Matthew 5-7): Christian Counter Culture,* The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 144. [24]Wisdom of Solomon 14:3; Sirach 23:1, 4. [25]Craig A. Evans, ed., *The Bible Knowledge Background Commentary: Matthew-Luke,* Bible Knowledge Series, vol. 1 (Colorado Springs, Colo.: Victor, 2003), 232. [26]*Didache* 8.2. [27]*"அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" என்ற வாக்குத்தத்தம் (எபிரெயர் 8:12; 10:17), நமது தவறான செயல்களுக்காகத் தேவன் நம்மைத் தண்டிக்கமாட்டார் என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. காண்க* F. F. Bruce, *The Epistle to the Hebrews,* The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 175. [28]Mishnah *Yoma* 8.1. [29]Mishnah *Taanith* 1.4-7; 2.9. *இரண்டாம் நூற்றாண்டில் இருந்த Didache என்ற நூல், விசுவாசிகளுக்குப் பின்வருமாறு அறிவுறுத்திற்று: "ஆனால் உங்கள் உபவாசங்கள் மாய்மாலக்காரருடையவை போன்று இருக்க அனுமதிக்காதீர்கள். அவர்கள் திங்கள் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் உபவாசிக்கின்றனர், எனவே நீங்கள் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் உபவாசிக்க வேண்டும்"* (*Didache* 8.1). [30]*தாவீது தனது உபவாசம் முடிந்தபின்னரே, "தரையைவிட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக் கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி"க் கொண்டார் (2 சாமுவேல் 12:20).*

[31]Keener, 228. [32]*இருப்பினும் மாதிரி ஜெபத்தை அப்படியே திரும்ப ஜெபித்தல் என்பது இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் காணப்பட்டது. ஒருவேளை, யூதத்துவ நடைமுறைகளைப் பிரதிபலித்த Didache என்ற நூல், ஒரு நாளைக்கு மூன்று முறை மாதிரி ஜெபத்தைச் செய்யும்படி விசுவாசிகளுக்கு அறிவுறுத்துகிறது.* (*Didache* 8.2, 3.)